**ஹபுதளை நகர சபை**

**பதுளை மாவட்டம்**

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 21 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 08 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்டம்பர் 06 ஆந் திகதி நகர சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹபுதளை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மந்திரிமார் படி தொடர்பாக செலவு விடயம் ஒன்று காணப்படாவிடினும், ரூபா 150,000 இற்கான செலவு ஒன்று கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த 13 அலுவலக உபகரண விடயங்களின் பெறுமதியாகிய ரூபா 347,999 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) பெக்கோ லோடரை எடுத்துச் செல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 44,430 செலவினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டு தொடர்பாக நடைமுறையாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 520,281 இற்கான 09 செலவுகளை நடைமுறை ஆண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 369,178 பெறுமதியான 13 செலவுகள் தொடர்பாக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) உள்ளூராட்சி ஊழியர்களின் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தவேண்டிய ரூபா 216,147 தொகை தொடர்பாக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) 05 நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோருக்காக ரூபா 739,215 தொகைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 97,202 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஐ) பெற வேண்டிய முத்திரைக் கட்டண மீதி ரூபா 60,039 தொகையினை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) முன்னைய ஆண்டிற்காக முத்திரைக் கட்டணம் குறை ஏற்பாடுகள் ரூபா 208,325 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஓ) நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து பெற வேண்டியிருந்த வாடிவீட்டு முகாமைத்துவக் கட்டணம் ரூபா 150,000 தொகையினை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய வீத வரியின் பெறுமதி ரூபா 87,422 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதவியணிக் கடன்பட்டோலை மற்றும் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 36,780 தொகையினால் இணங்கியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் முதலீடுகள் மற்றும் பிணை வைப்புக்களின் பெறுமதி மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 8,014 தொகையினால் இணங்கியிருக்கவில்லை.

(இ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பலவின வைப்புக்களின் மீதி மற்றும் பட்டோலைகளின் மீதி ரூபா 786,107 தொகையினால் இணங்கியிருக்கவில்லை.

(ஈ) காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் பணமும் பணத்திற்குச் சமமானவைகளினதும் மற்றும் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் பணமும் பணத்திற்கு சமமானவைகளினதும் மீதி ரூபா 74,824 தொகையினால் இணங்கியிருக்கவில்லை.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 16,679,661 ஆகக் காணப்பட்டதுடன், செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 27,358,293 ஆக இருந்தது.

1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) நகர சபைக் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 255) | |
| 77 ஆவது பிரிவு | 08 அங்கீகாரமின்றிய நிர்மாண வேலைகள் தொடர்பாக குறிப்பிட்ட சாராருக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) மோட்டார் வாகனப் போக்குவரத்து சட்டத்தின் அதிகாரம் 203 இன் பிரிவு | சபைக்குச் சொந்தமான 11 வாகனங்கள் தொடர்பாக நடைமுறை ஆண்டிற்காக வருமான அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. |
| (இ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 371 | சபையினால் 17 சந்தர்ப்பங்களில் பல்வேறு சாராருக்கு வழங்கியிருந்த முற்பணம் ரூபா 305,138 இனை 2015 திசெம்பர் 31 திகதி வரை தீர்த்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 571 | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 114,112 பெறுமதியான 22 காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக ஆதனவளிப்புச் செய்திருக்கவில்லை. |
| (ஈ) அரச தாபன விதிக் கோவையின் XXIV ஆவது அத்தியாயம் 1:6 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுள்ள, சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் இறந்துள்ள ஊழியர்கள் 21 பேரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் ரூபா 67,825 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (உ) 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் IAI/2002/02 கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | 06 கணனிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைக் கருவிகள் தொடர்பாக கணனி துணைக்கருவிகள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) 2010 மே 25 ஆந் திகதிய 4/2010 இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை மற்றும் ஊவா மாகாண ஆளுனர் செயலாளரின் 2014 திசெம்பர் 08 திகதிய 1/8/1/31(1) ஆம் இலக்கக் கடிதம் | சபையில் கடமையாற்றியும் நாளாந்த சம்பளம் பெறும் 06 சுகாதார மற்றும் பாதை தொழிலாளர்கள் தொடர்பாக 2015 ஆண்டு ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை 08 மாதங்களுக்காக அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு ரூபா 221,709 தொகை செலுத்தியிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,052,835 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,954,082 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வருமானம் சேகரிக்கும் செயலாற்றல்

--------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை வருமானம் அறவீடு செய்யும் முன்னேற்றம் 51 சதவீதம் முதல் 24 சதவீதம் ஆகிய குறைந்த நிலையிலேயே காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இரண்டு வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் நிலுவை வீதவரி ரூபா 2,761,870 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) இறைச்சிக் கடைகள், மீன் கடைகள் கேள்வி தாரர்களிடம் 2001 ஆண்டு முதல் சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1,304,026 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஈ) விளம்பர அறிவித்தல் பலகைகள் காட்சிப்படுத்தியதற்காக 2015 ஆண்டிற்காக பெறவேண்டியிருந்த ரூபா 116,400 இற்கான வருமானம் 2015 செப்டம்பர் 22 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

(உ) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 164(4) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 4,221,521 தொகை வருமானம் தொடர்பாக கொடுப்பனவினை பகிஷ்கரித்துள்ள நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) சுற்றாடல் சார் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 09 நிறுவனங்களுக்காக 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம் மற்றும் 1523/16 ஆம் இலக்கம் கொண்ட 2008 ஜனவரி 25 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அவ் அனுமதிப்பத்திரம் வழங்காமல் வர்த்தக அனுமதிப்பத்தரம் வழங்கியிருந்தது.

(எ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 ஆம் இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களினால் நடத்தப்படும் அனைத்து கடைகளின் மாதாந்த வர்டகை பிரதான பெறுமதி மதிப்பீட்டாளர்களினால் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டு அளவில் பதிவு செய்யப்பட்டிருந்த 129 முச்சக்கர வண்டிகளில் இருந்து சபைக்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த வருமானத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 310,833 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 816,610 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1999 முதல் 2007 வரையான காலப் பகுதி தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த வாடி வீட்டு வாடகை ரூபா 3,974,194 தொகை மற்றும் சபை நிதியத்தில் இருந்து தீர்க்கப்பட்டிருந்த வாடிவீட்டின் மின் கட்டணம் ரூபா 74,824 தொகை 2015 செப்டம்பர் 22 திகதி வரையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டக் கணிப்பீட்டின் போது இனங்காணப்பட்டிருந்த பற்றாக் குறைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 103,104 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. அத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விதப்புரைகளை 2015 செப்டம்பர் 22 திகதி வரையும் செயற்படுத்தியிருக்கவில்லை.

(இ) 2015 செப்டம்பர் 22 கணக்காய்வுத் திகதி வரையும் செயற்படு நிலையில் காணப்பட்ட 02 கணக்கு இயந்திரங்களை (Scientific Calculator) அழிப்பதற்காக விதந்துரைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2013 திசெம்பர் 19 திகதி விபத்துக்கு உள்ளாகியிருந்த வான் வண்டி ஒன்றினை பழுதுபார்ப்பதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 300,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், காப்புறுதி நட்டஈடாக ரூபா 175,000 தொகை மாத்திரம் கிடைத்திருந்ததுடன் அது தவிர செலவிடப்பட்ட ரூபா 125,000 தொகையினை தீர்க்கும் முறை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 விளைவற்ற சொத்துக்கள்

-------------------------------------------

2014 அக்டோபர் 10 திகதி சபையின் பல்கரும கட்டிடத்தில் 02 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களுக்காக ரூபா 70,544 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் மாதம் வரையும் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மீளாய்வாண்டிற்கான பாதீடு, வருமானம் மற்றும் செலவுகளைக் கட்டுப்படுத்தும் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

---------------------------------------------------

நடைமுறை ஆண்டில் வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

-------------------------------------

2015 ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

-------------------------------------------------------------------------------------------

நடைமுறை ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தப்படவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு